பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 4 (17—5—68) வெள்ளி ★ வெளியூர்: வைகாசி 5 (18—5—68) சனி [இதழ்: 279

வாஷிங்டன் நோக்கி வறியோர் அணிவகுப்பு

★

வாஷிங்டன், மே 15—

'வாஷிங்டன் நோக்கி வறியோர் (நீக்ரோக்கள்) அணிவகுப்பு' இயக்கம் நடத்துவதற்குப் போதிய நிதி வசதி இல்லாதது ஒரு பிரச்சினையாகியிருக்கிறது.

தென் பகுதி கிருஸ்துவத் தலைமை மாநாட்டு அதிகாரிகள் இதுபற்றிக் கூறுகையில், இந்த இயக்கத்தை நடத்த ஒரு மாதத்துக்குத் தேவைப்படும் பணத்தில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாகவே கைவசமுள்ளதாகவும், தங்கள் மீது அனுதாபம் கொண்டுள்ள அமெரிக்கர்கள் இந்தப் பற்றாக்குறையை நன்கொடைகள்மூலம் நிறைவு செய்வார்கள் எனத் தாங்கள் நம்புவதாகவும் குறிப்பிட்டனர்.

இயங்க முடியாத ஆலைகளை அரசே ஏற்க நடவடிக்கை

★

டில்லியில் அண்ணா முயற்சி

கைத்தறித் துணிக்குத் தள்ளுபடி-தனி நிதியுதவக் கோரிக்கை

புதுடில்லி, மே 16 —

தமிழகத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளுள் எந்தெந்த ஆலைகளை அரசு ஏற்று நடத்த முடியும் என்று ஆராயத் தொழில் வளர்ச்சி -- ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் குழு ஒன்றை மத்திய அரசு அமைக்க விரும்புவதாகத் தெரிகிறது.

"தமிழகத்திலுள்ள நலிவுற்ற பஞ்சாலைகளை அரசே ஏற்று நடத்த வேண்டும்" என்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் மத்திய வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங்கைச் சந்தித்துக் கேட்டபோது, முதற்கட்டமாக இக்குழுவை அமைக்க மத்திய அமைச்சர் தினேஷ் சிங் ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

மூடப்பட வேண்டிய நிலையில் உள்ள பஞ்சாலைகளோடு ஏறத்தாழ இருபதுக்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் தமிழகத்தில் மூடப்பட்டுவிட்டன. இந்த நெருக்கடிகளை எப்படியாவது தீர்க்க வேண்டும் என்று தமிழக அரசு முழுக்கவனம் செலுத்திவருகிறது.

"இக்குழுவை அமைப்பதோடு, அரசு ஏற்று நடத்த வேண்டிய பஞ்சாலைகளுக்கு நிதியுதவியையும் மத்திய அரசு அளித்திட வேண்டும்" என்றும் அண்ணா அவர்கள் வற்புறுத்தினார்; குழு அமைக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டிருப்பதாகவும் ஆனால், 'நிதியுதவி அளிக்க முடியாது' என்ற கருத்தை மத்திய அரசு கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

"மத்திய வர்த்தக அமைச்சரை மீண்டும் சந்திக்கும் போது இதனை வற்புறுத்தப்போகிறேன்" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

"ஓராண்டில் மூன்று மாதங்களுக்கு ரூபாய்க்குப் பத்துக் காசு வீதம் கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்க அனுமதியளிக்க வேண்டும்' என்ற கோரிக்கை பற்றி அண்ணா குறிப்பிடுகையில், 'இதற்குத் தேவையான நிதி வசதிகளைத் திட்டங்களுக்கு ஒதுக்கும் நிதியோடு இல்லாமல் தனியாக அளிக்க வேண்டும்' என்றும் தெரிவித்தார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"என்னுடைய மாநிலத்தில் இருபது ஆலைகள் மூடப்பட்டுள்ளன; இவற்றில் சில, சீர்திருத்தப்பட முடியாதவை.

"தவறான நிர்வாகத்தால் மூடப்பட்ட ஆலைகளை மத்திய அரசின் நிதி உதவியுடன் மீண்டும் திறக்க முடியும்; அதில் கணிசமான [illegible]ருக்கு வேலை தரமுடியும்.

"தேங்கிக் கிடக்கும் நூலில் ரூ. 5 கோடிபெறுமானவற்றை மத்திய அரசே வாங்கி வைப்பதெனத் தெரிவிக்கப்பட்ட யோசனை, 'நூல் தேக்கத்தால் மூடப்பட்டுவிடுமோ' என அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பல ஆலைகளுக்கு நிவாரணம் அளிக்கும்.

'ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்தில் கைத்தறிப் பொருட்களையும் சேர்த்துக்கொள்ள வணிகத்துறை அமைச்சர் ஒப்புக்கொண்டார்."

அரியானா தேர்தல் முடிவு

மீண்டும் காங்கிரசுக்குப் பழைய நிலைதான்!

48 இடங்களையே கைப்பற்ற முடிந்தது

புதுடில்லி, மே 16—

அரியானா மாநிலச் சட்டமன்றத்திற்கு நடந்து முடிந்துள்ள இடைக்காலத் தேர்தலில், காங்கிரசுக் கட்சி எவ்வளவோ பாடுபட்டும்—தனக்கேயுரிய எல்லாவகைத் தந்திரங்களையும் கையாண்டும் கூட, பொதுத் தேர்தலில் கிடைத்த அளவு இடங்களையே பெற முடிந்திருக்கிறது.

முன்பிருந்த இடங்கள் குறையாமல் காப்பாற்றிக் கொள்வதே பெரும்பாடாக அமைந்தது. எப்படியோ முன்பிருந்த பலத்தை நிலைநாட்டிவிட்டது; அதாவது, மொத்தமுள்ள 81 இடங்ங்களில் 48 இடங்களை மட்டுமே மீண்டும் பெற்றிருக்கிறது.

தமிழக அரசின் கருத்தை டெல்லி ஏற்றது!

மத்திய சட்டங்கள் மாநிலத்திலேயே மொழி பெயர்க்கப்படும்

சென்னை, மே 16—

"மாநிலத்தில் வழக்கில் உள்ள சொற்களைப் பயன்படுத்தி, மாநில அரசு உருவாக்கியுள்ள ஆட்சிச் சொல் அகராதியின் துணை கொண்டே மத்திய சட்டங்களை மொழி பெயர்க்க வேண்டும் என்றும் ஏற்கனவே முடிவு செய்துள்ளபடி மத்திய அரசின் ஆட்சிச் சொல் அகராதியை இதற்குப் பயன்படுத்தக்கூடாது என்றும், மாநில அரசே இந்த மொழி பெயர்ப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழக அரசு கொண்டுள்ள கருத்தை மத்திய அரசு இப்போது ஏற்றுக்கொண்டுவிட்டது"

என்று, தமிழகச் சட்டத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் தெரிவித்தார்.

"மத்திய அரசின் சட்டங்களை வட்டார மொழிகளில் பெயர்க்கும் பணியை, மாநிங்களே மேற்கொள்ளும்; இப்பணியை, மத்திய சட்ட அமைச்சகத்தின் கீழ் உள்ள ஆட்சி மொழிச் சட்டக் குழுவே செய்யலாம் எனத் துவக்கத்தில் கருதப்பட்டது; எனினும் இப்பணி, மாநிலத் தலைநகர்களில் நடைபெற்றால் எளிதாகவும், நலமாகவும் இருக்கும் எனக் கருதுகிறேன்."

என, மத்திய சட்டத்துறை அமைச்சர் கோவிந்த மேனன், தமிழகச் சட்ட அமைச்சர் செ. மாதவனுடனும், ஆட்சிமொழிச் சட்டக் குழுத் தலைவர் எம். அனந்தநாராயணனுடனும் பேச்சுவார்த்தை நடத்தியபின் கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"என்னுடைய கருத்தை, அவ்விருவரும் ஒப்புக்கொண்டனர்; மேற்கொண்டு விவரமாக விவாதித்து: உரிய திட்டத்தை உருவாக்கும் பொருட்டு சூலைத் திங்களில் மீண்டும் நான் இங்கு வரக்கூடும்.

"இறுதியில், தலைமை நீதி நீதிமன்றத்தில் (சுப்ரீம் கோர்ட்) ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டும் பயன்படுத்தப்பட வேண்டியிருக்கும்."

தேர்தல் கண்ணோட்டம்

	போட்டியிட்ட இடம்	வெற்றி பெற்ற இடம்
காங்கிரசு	81	48
ஜன சங்கம்	43	7
சுதந்தரா	32	2
விசால அரியானா	29	19
சுயேச்சைகள்	180	9
பாரதீய கிரந்தி தளம்	6	1
குடியரசு	18	1
ச. சோ.	8	0
வலது கம்யூனிஸ்டு	3	0
இடது கம்யூனிஸ்டு	2	0
பி. சோ.	2	0

ச.சோ, பி.சோ., கம்யூனிஸ்டு (இடது, வலது) கட்சிகளுக்கு ஓர் இடம்கூடக் கிடைக்கவில்லை.

கடலை எண்ணெய் ஏற்றுமதிக்கு அனுமதி

உச்சவரம்பு நிர்ணயம்

பம்பாய், மே 17—

"ஓர் உச்சவரம்புக்குட்பட்டு கடலை எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப்பது" என இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

1968 செப்டம்பருடன் முடியும் வரையிலோ அல்லது உச்சவரம்பை எய்திடும்வரையிலோ ஏற்றுமதி அனுமதிக்கப்படும்.

செஸ்டர் பௌல்சுடன் அண்ணா சந்திப்பு

உள்துறை துணையமைச்சர் விருந்து

புதுடில்லி, மே 16—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இன்று மாலை அமெரிக்கத் தூதுவரான திரு. செஸ்டர் பௌல்சைச் சந்தித்து ஒரு மணி நேரத்துக்குமேல் பேசிக்கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பு முழுக்க முழுக்க நட்பு முறையிலானதே என்று அண்ணா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிறகு, மத்திய உள்துறைத் துணையமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி அண்ணா அவர்கட்கு ஓர் விருந்தளித்தார். இந்த விருந்தில் மத்திய அமைச்சர்களும், முதிய காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியமும் கலந்துகொண்டனர்.

கைவிலங்குடன் கள்ளச் சந்தை 'வீரர்'கள்!

கிருஷ்ணா நகர், மே 13—

சட்டத்திற்குப் புறம்பாக அரிசியைப் பதுக்கி வைத்திருந்த 31-பேர்களைப் போலீசார் கைது செய்து கிருஷ்ணா நகரின் தெருக்களில் கைவிலங்கிட்டு ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

1200 மணங்கு எடையுள்ள (ரூ. 1-இலட்சம் மதிப்புள்ள) அரிசி மராத்தி கிராமத்தில் உள்ள கிடங்கு ஒன்றில் சோதனை செய்தபோது பிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் கள்ள மார்க்கெட்டுக்காரர்களாவர்.

இவர்களைப் பகிரங்கமாக வீதிகளில் அழைத்துச் செல்வதைப் பார்த்த பொதுமக்கள் கையொலி எழுப்பி ஆரவாரம் செய்தனர்.

வேளாண்மைக்கு முதலிடம்-தொழிலுக்கு அடுத்த இடம்

தமிழகத்தின் நியாயமான மொழியுணர்ச்சியை மற்றவர்கள் மதிக்க வேண்டும்

ஒற்றுமை ஓங்கவும் நாடு வளம் பெறவும் வழிகள்— அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

'இம்மத்' எனும் ஏட்டின் ஆசிரியர் தமிழக அரசின் தலைமைப் பணிமனையில் பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்களைச் சந்தித்தபோது கேட்ட கேள்விகளும், அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

ஆசிரியர் லாலா :—" இந்தியாவின் மொழிப் பிரச்சினைக்குத் தாங்கள் சொல்லும் தீர்வு என்ன ?"

மு. கருணாநிதி :—" எங்கள் தலைவர் அண்ணா அமெரிக்காவிலும் இங்கும் சொல்லியிருப்பதைப் போன்று, மொழிப் பிரச்சினையையே 25 ஆண்டுகளுக்குத் தள்ளி வைத்துவிட வேண்டும்."

கேள்வி :—" மத்திய — மாநில உறவு பலப்படத் தங்களின் யோசனை என்ன ?"

பதில் :—" வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு, செய்திப் போக்குவரத்து போன்ற ஒரு சிலவற்றை மட்டும் மத்திய அரசு எடுத்துக்கொண்டு மீதியுள்ள அதிகாரங்களை மாநில அரசுக்குத் தருவது, மத்திய—மாநில அரசுகளின் உறவு பலப்பட வழிவகுக்கும்; அதனால் உண்மையான தேசிய ஒருமைப்பாடும் ஏற்படும்."

கேள்வி :—" தங்களுடைய இந்த யோசனைக்கு மற்ற மாநிலங்களில் ஆதரவு இருக்கிறதா?"

பதில் :—" மற்ற மாநிலங்களிலுள்ளவர்களிடம் இந்த எண்ணம் இருக்கிறது; அதை ஒன்றுசேர்த்து உருவாக்கியார் எழுப்புவது என்பதுதான் பிரச்சினை."

கேள்வி :—" தங்களுடைய புதிய ஆட்சியின் சாதனைகளில் தலைசிறந்தவை எவை என நினைக்கிறீர்கள்?"

பதில் :—" ஏழை மக்களின் முக்கிய உணவுப் பொருளான அரிசியின் விலையைக் குறைத்தது; பஸ்கள் தேசியமயத் திட்டத்தை நிறைவேற்றுவது."

கேள்வி :—" தமிழகம் இந்தியாவுக்கு எந்த வகையில் வழி காட்ட விரும்புகிறது?"

பதில் :—" வேற்றுமைஉணர்ச்சிகளையப்பட்டு ஒற்றுமை உணர்ச்சி ஏற்பட வேண்டுமானால், பிறரது நியாயமான உணர்ச்சிகளை மதிக்கும் மனப்பக்குவம் ஏற்பட வேண்டும்; இந்தியாவில் தற்போது வேற்றுமை உணர்ச்சி களையப்படத் தமிழகத்தின் நியாயமான மொழி உணர்ச்சியைப் பிறர் மதிக்க வேண்டும்; அப்படி மதிப்பதன் மூலம் 'நியாய உணர்ச்சியை மதித்தோம்' என்ற மனநிறைவும், உண்மையான ஒற்றுமை உணர்வும் நாட்டில் ஏற்படும்; இதுதான் தமிழகம் காட்டும் வழியாகும்.

" இதைத் தொடர்ந்து இன்னொரு முக்கியமான நடைமுறைச் செயலிலும் இந்தியாவுக்குப் புதிய தமிழகம், ஒரு செய்தியைத் தருகிறது. இப்போதிருக்கும் நிலைக்கு மாறாக, வேளாண்மைக்கு முதலிடமும், அதனைத் தொடர்ந்து தொழிலுக்கு அடுத்த இடமும் தரப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்; அதை நடைமுறைப்படுத்தியும் வருகிறோம். இதைப் போன்று நாட்டின் பிற பகுதிகளும் விவசாயத்திற்கு முதலிடம் தருவதற்கு முன்வர வேண்டும்."

'நாம் முன்னேறவில்லையே' என்ற சலிப்புணர்வு வேண்டாம்

உழவும்—தொழிலும் வளரப் பாடுபடுவோம்!

வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கு அண்ணா அறிவுரை

" வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அவர்கள் வாழும் நாட்டுடன் இந்தியாவை ஒப்பிட்டு—'நம் நாடு முன்னேறவில்லையே' என்று சலித்துக் கொள்கிறார்கள். அமெரிக்காவில் வாழும் மாணவர்களுடன் நான் பேசியபோது, அவர்களிடம் இருந்த சலிப்பையும் வெறுப்பையும் அறிந்து கொண்டேன்.

" அவர்களிடம் நான், 'நம்முடைய நாடு பெரியது; ஆகவே, செல்வம் பல இடங்களுக்குப் பிரிந்துவிடுவதால் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் காட்சி அளிக்கும்; நீங்கள் எல்லா செல்வங்களையும் ஒரே இடத்தில் பார்க்கும்போது அது பெரிதாகத் தெரிகிறது' என்று கூறினேன்.

" மாணவர்களுக்கு இருந்த சலிப்பு உணர்ச்சி ஒருகணம் தான் இருந்தது; நான் புறப்படும்போது, 'எங்களுக்கு நாடு திரும்ப வேண்டும் என்ற ஆசை அதிகமாக இருக்கிறது; நமது நாட்டையும் செல்வம் கொழிக்கும் நாடாக ஆக்க வேண்டும்' என்று அவர்களே சொன்னார்கள்.

" வெளிநாடுகளில் பயிலும் நம் மாணவர்கள், நாடு திரும்பியதும், நல்ல தொண்டு ஆற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

" நாடு முன்னேற வேண்டுமானால், விவசாயத்திலும் தொழிலிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும்; வெறும் தொழிலில் மட்டும் முன்னேறினால் போதாது. விவசாயம் உறுதிப்பட்டால்தான் தொழிலில் முன்னேற முடியும். விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

" நாட்டுக்குத் தேவையான நல்ல தொழில்களைத் தொடங்கி தொழில் மயம் ஆக்கவேண்டும்; அதன்மூலம் மற்ற நாடுகளைப்போல் நாமும் முன்னேற முடியும்."

பறங்கிமலை ஒன்றியத்தில் அண்ணா மணி விழாத் திட்டம்

நிறைவேற்றிவைப்பதில் எம். ஜி. ஆர். ஆர்வம்

சென்னை, மே 17—

முதலமைச்சர் அண்ணா அவர்களின் மணி விழாவையொட்டி, ஊராட்சி ஒன்றியங்களுக்கான ஓராண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது; அதன்படி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் செய்யவேண்டிய பணிகள்பற்றி வரையறுக்கப்பட்டது.

இப்பணிகளை நிறைவேற்றுவதிலும், மேலும் பல திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் பறங்கிமலைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தீவிரம் காட்டிவருகிறார்.

முதலமைச்சர் மணி விழாத் திட்டத்தின்கீழ் பறங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு டிராக்டர் வாங்குவதென முடிவு செய்யப்பட்டு வாங்கப்பட்டுவிட்டன.

நவீன உழு கருவிகள் 2 வாங்குவதென முடிவு செய்யப்பட்டு வாங்கப்பட்டுவிட்டன.

கையால் இயக்கப்படும் மருந்து தெளிக்கும் கருவிகள் 7 வாங்குவதெனத் திட்டமிடப்பட்டு, 4 வாங்கப்பட்டுவிட்டன.

மின்சாரத்தால் இயங்கும் மருந்து தெளிக்கும் கருவிகள் 4 வாங்குவதென முடிவு செய்யப்பட்டு, 2 வாங்கப்பட்டுவிட்டன.

காய்கறித் தோட்டங்கள் 36 அமைப்பதென முடிவு செய்யப்பட்டு, இதுவரை 26 தோட்டங்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

நான்கு பொதுக் கிணறுகள் வெட்டத் திட்டமிடப்பட்டு, வெட்டப்பட்டும்வருகிறது.

" குறித்த காலத்துக்குள் முதலமைச்சர் மணி விழாத் திட்டத்தை நிறைவேற்றிவிட வேண்டும்" என்பதில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் மிகுந்த ஆர்வம் காட்டிவருகிறார்.

தேசீய மாணவர் படை

அதிகாரிகள் பயிற்சியில் கலந்துகொள்ள அனுமதி

" தேசீய மாணவர் படையைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி மாநில அரசு ஆணை பிறப்பித்திருந்தபோதிலும், உத்தரப் பிரதேசத்தில் இவ்வாண்டு நடைபெறவிருக்கும் அதிகாரிகள் பயிற்சி முகாமில் கலந்துகொள்வதற்காக ஒரு குறைந்த அளவினரை அனுப்பிவைக்க அரசு அனுமதியளித்துள்ளது" என்று தேசீய மாணவர் படையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அண்ணா கருத்தை எதிரொலிக்கிறார் நியூயார்க் ஆளுநர் :

'மாநில அரசுகள் வலிமையுடன் இருக்கவேண்டும்'

'மத்திய அரசு காட்டும் வழியை மட்டுமே நம்பியிருக்கக்கூடாது'

அமெரிக்கத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுபவர் கருத்து

" மாநில அரசு வலிமைமிக்கதாக இருக்கவேண்டும்; மாநிலங்கள், பல்வேறு சொந்தத் துறைகளிலே மத்திய அரசு காட்டும் வழியையே பின்பற்றலாகாது; அவையே முன்வந்து தாமாகச் செயலாற்ற வேண்டும்; எனவே, மத்திய அரசிடமிருந்து எவ்வளவு அதிகாரமும் வரிப் பணமும் மாநில அரசுகளுக்கு மாற்ற முடியுமோ அவ்வளவும் மாற்றப்பட வேண்டும்."

இவ்வாறு, ஒன்பதாண்டுக் காலம் நியூயார்க் மாநிலத்தின் ஆளுநராகப் பணியாற்றியவரும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்குக் குடியரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடுபவருமான நெல்சன் ராக்பெல்லர் கருத்தறிவித்துள்ளார்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தல் இயக்கமே விந்தையானது; அதன் போக்கைப் பற்றி யாரும் ஒன்றும் சொல்ல முடியாது; திடீரென்று எதிர்பாராத திருப்பங்கள் அதிலே ஏற்படக் கூடும்.

இயக்கத்தில் முழு மூச்சுடன் இறங்கி வேலை செய்பவர் சில சமயங்களில் முன்னேற்றம் காணாமற் போகக்கூடும்; அதிக அக்கறை இல்லாமல் வாளாவிருப்பவர் திடீரென்று வெற்றி ஏணியிலே ஏறிக் கொண்டே செல்வதைக் காணலாம்.

இரண்டாவது தரப்பைச் சேர்ந்தவர்தான் நியூயார்க் மாநில ஆளுநர் நெல்சன் ராக்பெல்லர்.

குடியரசுக் கட்சி தேசிய மாநாட்டில் குடியரசுத் தலைவர் பதவிக்கு வேட்பாளராக நிற்க நியமனம் கோரப்போவதாக அண்மையில் தான் அவர் அறிவித்தார்; அதற்கு முன்னரே, 'நாட்டின் பேராதரவு உள்ள ஒரு வேட்பாளர்' என்றே அவர் மதிக்கப் பெற்று வந்தார்.

நியூயார்க் மாநில ஆளுநராக அவர் 1958-ல் முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பெற்றார். தேர்தல் மூலம் வந்த முதல் பதவி இதுதான். 1962-லும், 1966-லும் அவர் தொடர்ச்சியாக வெற்றிபெற்று வந்துள்ளார். எனவே, அமெரிக்க மாநில ஆளுநர்களில் இவர்தான் நீண்ட காலமாகப் பதவியிலிருந்து வரும் மூத்த ஆளுநர்.

காட்சிக்கு இனிமையானவர்; அன்புள்ளவர்; எனவே, ஆளுநர் ராக்பெல்லர், அனைவருக்கும் பிடித்தமானவர். பற்பல சமுதாயத்தினர் வாழும் நியூயார்க் நகரில் அவருடைய தேர்தல் வெற்றிச் சாதனைகளே இதற்குச் சான்று.

அவர், மக்களை எளிதில் சந்திக்கிறார்—பழகுகிறார்! நாவன்மை படைத்தவரும்கூட!

ஒன்பதாண்டுக்காலம் அவர் ஆளுநராகப் பணியாற்றிய காலத்தில்—சுகாதாரம், பொதுநலம், குடியிருப்பு, கலவி, வேலைவாய்ப்புத் துறைகளில் பற்பல மாநிலத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

அவருடைய நிர்வாகத்தில் பல்கலைக் கழகங்கள் மும்மடங்கு பெருகியுள்ளன; உயர்நிலைப் பள்ளி—துவக்கப் பள்ளிகளுக்கு உதவி 170 சதவிகிதம் அதிகரித்துள்ளது; போக்குவரத்து வசதிகளை நவீனமயமாக்க 250 கோடி டாலர் திட்டம் ஒன்றை மாநில அரசு கொண்டுவந்துள்ளது. குறைந்தபட்ச சம்பளம் மணிக்கு $1\frac{1}{2}$ டாலர் என்று நிர்ணயித்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நீர் அசுத்தப்படுவதைத் தடுக்கும் 100 கோடி டாலர் திட்டத்தைத் துவக்கிவைத்தது.

இதன் விளைவாக நியூயார்க் மாநிலத்தின் வரவு-செலவுத் திட்டம் 450 கோடி டாலருக்குமேல் போய்விட்டது. 1959—60 ஆண்டு நிதி ஆண்டிலே இருந்த வரவு-செலவித் திட்டம் 200 கோடி டாலர்தான். வரிகளை உயர்த்தி வரவும்-செலவும் சரிக்கட்டிக் கொண்டு போகும் திட்டத்தையே அவர் எப்பொழுதும் தயாரிக்கிறார்.

தேசிய நிலையிலும் நிதி நிலைமை முழுமை பெற்றிருப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வந்திருக்கிறார். 'பற்றாக்குறைத் திட்ட முறையைக் கைவிட வேண்டும்' என்றும் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார்.

இந்தியாவுக்கு அமெரிக்காவின் புதிய கடன்

வேளாண்மை — கைத்தொழில்: வளர்ச்சிக்கு உதவும்

புதுடில்லி, மே 16—

குறிப்பிட்ட திட்டங்களுக்கு என்றில்லாமல், இன்றியமையாதவைகளான விவசாய—கைத்தொழில் பொருள்களை இறக்குமதி செய்து கொள்வதற்காக அமெரிக்க அரசு, 22 கோடி டாலர் (ரூ 168 75 கோடி) இந்தியாவுக்குக் கடனாக வழங்கியிருக்கிறது,

" இந்தப் பணத்தைக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் எதனையும் இந்திய அரசு துவங்கக் கூடாது; ஆனால், விவசாயக் கருவிகளையும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொருள்களையும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள வேண்டும்" என, ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தத்தின்படி, முதலில் ரூ. 75 கோடி மதிப்புள்ள விவசாயக் கருவிகள் இறக்குமதி செய்யப்படும்: அடுத்து, பூச்சி மருந்தும் உரமும் இறக்குமதி செய்யப்படும்; மீதியுள்ள பணத்திற்குத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படும்.

மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள்

புதிய அமைப்பின்கீழ் இயங்கும்

திருச்சி, மே 16—

அரசினர் மேற்கொண்டுள்ள சுமார் 1,000 முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகத்துக்கு இந்த ஆண்டு சூன் 1-ம் நாளிலிருந்து புதிய அமைப்பு ஏற்படக்கூடும்.

புதிய அமைப்பில், போர்டு உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகம் தலைமைக் கல்வி அதிகாரிகளின் கீழ் இயங்கும்.

மாநிலத்தில் தலைமைக் கல்வி அதிகாரிகள் பத்துப்பேர் இருப்பார்கள்.

வீட்டுக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும் திட்டம்

எதிர்கால நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் சிறு சேமிப்பு

டாக்சி — ஆட்டோ தொழிலாளர்களிடம்

என். வி. என். — எம். ஜி. ஆர். விளக்கம்

சென்னை, மே 17—

"தமிழகத்திலே இருக்கின்ற நான்கு கோடி மக்களில் இரண்டு கோடி பேர் மாதம் ரூ. 5 வீதம் கொடுத்தால் ரூ. 120 கோடி ஆண்டுக்குக் கிடைக்கும் இதில் ரூ. 80 கோடி இங்கே இருக்கும்; மீதி மத்திய அரசுக்குப் போகும்; மூன்றில் ஒரு பங்கு மத்திய அரசிடமும், இரண்டு பங்கு தமிழகத்திலும் இருக்கும்.

"ரூ. 15,000 கொடுத்தால் எப்படி ஒரு டாக்சி சொந்தமாகுமோ அதைப்போல் ரூ. 80 கோடி ஒவ்வோர் ஆண்டும் தமிழக அரசுக்குக் கிடைத்தால் பல நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியும்"

என்று, சிறு சேமிப்புத் திட்டத் துணைத் தலைவரான புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், டாக்சி--ஆட்டோ தொழிலாளரிடை பேசுகையில் விளக்கினார்.

என். வி. நடராசன்

தமிழ்நாடு டாக்சி – ஆட்டோ தொழிலாளர் சங்கப் பேரவைக் கூட்டம், 15—5—68-ல் சிந்தாதிரிப்பேட்டை புது பங்களா தெருவில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. என்.வி. நடராசன் எம்.எல்.சி. தலைமைவகித்தார்; அவர் பேசுகையில் கூறியதாவது :—

"நாட்டிலுள்ள தொழிலாளர்களின்—ஏழை மக்களின்—நடுத்தர மக்களின் எதிர்கால வாழ்க்கைக்கு அடிப்படை சிறு சேமிப்புத் திட்டம். இந்தத் திட்டத்தில் நிச்சயமாக ஒவ்வொரு தொழிலாளரும் ஈடுபட வேண்டும்.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் சிறு சேமிப்புத் திட்டத்தின் துணைத் தலைவராக இருந்து திறம்படப் பணியாற்றி வருகிறார். 'அந்தப் பணியை அவர் திறம்படச் செய்வார்' என்று மனதார உணர்ந்த அறிஞர் அண்ணா அவர்கள், இந்தப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். எம்.ஜி.ஆர். அவர்களும் அவரது பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறார்.

ஏராளமான மக்கள் சிறு சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுவதுபோல், டாக்சி–ஆட்டோ தொழிலாளர்களும் சேர்ந்து வாழ்க்கையில் வளம் பெற வேண்டும்."

எம். ஜி. ஆர்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் உரையாற்றுகையில் கூறியதாவது :—

"சிறு சேமிப்புத் திட்டத்தில் முதலீடு செய்வது ஒவ்வொருவருக்கும் நல்லது. எந்த அரசு வந்தாலும் நீங்கள் முதலீடு செய்கிற பணம் திரும்பக் கிடைக்கும்.

உங்கள் அறிவையும் உழைப்பையும் தந்து நீங்கள் சம்பாதிக்கிற பணத்தை யாரிடத்திலாவது கொடுத்து வைத்தால், அதற்கு உத்தரவாதம் கிடையாது. ஒருவருக்கொருவர் மனக்கசப்பு ஏற்பட்டு வழக்கு மன்றத்துக்குப் போகவேண்டிய நிலை வரும்.

ஆகவே, சிறு சேமிப்பில் முதலீடு செய்வது அவசியமானது-நியாயமானது—தேவையானது - பாதுகாப்பானது—என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

நீங்கள் கொடுக்கிற பணம், நீங்கள் விரும்பும்போது ஐந்து அல்லது பத்தாண்டுகளுக்குப் பிறகு திரும்பவும் வட்டியோடு கிடைக்கும்.

குறிப்பாக, சேமிப்பதில் திறமையுள்ளவர்கள் தாய்மார்கள்; அவர்களுக்குத்தான் பணத்தின் அருமை தெரியும்.

குழந்தைகள் செய்யும் அனாவசியச் செலவைத் தடுத்து அவர்களுக்கும் சேமிக்கும் பழக்கத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

என்மீதுள்ள அன்பின் காரணமாக நான்கைந்து பங்கள் பார்க்கத் தேவையில்லை; ஒரு படம் பார்த்துவிட்டு பணத்தைச் சேமிக்க வேண்டும்.

குழந்தைகளுக்குச் சிறு வயதில் இப்படிப்பட்ட நல்ல பழக்கங்களைக் கற்றுக்கொடுத்தால் அக்கறையோடு செயல்படக்கூடும்.

மிட்டாய்களை வாங்கித் தின்பதைவிட—சில தேவையற்ற பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதைவிட—அனாவசியமாக சினிமா பார்ப்பதைவிட—சிறு சேமிப்பில் முதலீடு செய்தால் அவர்களுடைய குடும்பத்திற்கும், நாட்டுக்கும் நல்லது; அதோடு, 'சேர்க்க வேண்டும்' என்ற அக்கறையும் ஏற்படும்; 'குழந்தைகள் நல்ல பணியைச் செய்தார்கள்' என்ற பெருமையும் ஏற்படும்.

இதற்கு யார் முன்வருவது என்பதுதான் ஒவ்வொருவருக்கும் உள்ள பிரச்சினை; நம்முடைய தாய்மார்களும், சகோதரிகளும், பாட்டாளிகளும், தொழிலாளத் தோழர்களும் இதற்கு முன்வர வேண்டும்.

முதல் மாதம் ரூ. 5 முதலீடு செய்தால் அந்தத் தொகை வளர்ந்து கொண்டே போகும்.

உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கும் நீங்கள் நல்ல முறையில் வாழ்வதற்கும் சிறு சேமிப்பில் ஈடுபட்டால் பாதுகாப்பாக இருக்கும்."

டாக்சி — ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்கள் பலர் சிறு சேமிப்பில் முதலீடு செய்ய எம். ஜி. ஆர். அவர்களிடம் பணத்தைக் கொடுத்தார்கள்.

பின்னர் தமிழக அரசு தயாரித்துள்ள சிறு சேமிப்புப் பற்றிய திரைப் படம் காண்பிக்கப்பட்டது.

கும்மங்குளம் துவக்கப் பள்ளி ஆண்டு விழா

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கும்மங்குளம் கிராமத்தில் 6—5—68 அன்று துவக்கப் பள்ளி ஆண்டு விழா ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது.

ஆலங்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே. வி. சுப்பையா பி.ஏ. அவர்கள், திருவள்ளுவர் உருவப் படத்தைத் திறந்து வைத்து சிறப்புச் சொபொழிவாற்றினார்.

புதுக்கோட்டை கோட்டப் பஞ்சாயத்து அலுவலகர் பிரான்சில் பி.ஏ., அவர்கள், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார்.

இரவு, 'குருட்டு அதிர்ஷ்டம்'—'மிளயாய்ப் பொடியும் உலக்கைப் புராணமும்' என்னும் நகைச்சுவை நாடகங்கள் பள்ளி மாணவர்களால் நடத்தப்பட்டது.

நெய்வேலி--புதுநகரில் மே நாள் விழா

எஸ். ஆண்டகுருநாதனுக்கு சைக்கிள்--கடிகாரம் அன்பளிப்பு

5—5—68-ல், நெய்வேலி--புதுநகரில் மே நாள் விழா பொதுக் கூட்டமும்—இரயில்வே தொழிற் சங்கத் தலைவர் திரு. ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டும், திரு. டி. அமாவாசை தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் எம். செல்வராசு, டி. இராமசாமி, பி. வி. சீனிவாசன், கோபால் ஆகியோர் மே நாள் விழா பற்றியும், பராங்குசம் அவர்களைப் பாராட்டியும் பேசினர்.

கூட்டத்தில் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் செயலாளர் எஸ். ஆண்டகுருநாதனின் தொண்டினைப் பாராட்டி, அவரை ஊக்குவிக்கும் வகையில், நெய்வேலி 26-வது வட்டம் செல்வராசு மன்றச் சார்பில் அவருக்கு சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டது; அத்துடன் நெய்வேலி மத்திய தொழிற்கூட நண்பர்கள் சார்பில் கைக்கடிகாரம் ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

சொந்தத் தொலைபேசி வசதி

தமிழ்நாட்டில் கோவை, ஈரோடு, மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களுக்கு இந்த ஆண்டு சனவரி முதல் நாளிலிருந்து, 'சொந்தத் தொலைபேசி வைத்துக்கொள்ளுங்கள்' என்னும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி ஒரு தொலைபேசி பொருத்துவதற்குத் துவக்கத்தில் ரூ. 2,500 வசூலிக்கப்படும். தொலைபேசி வாடகையில் முதல் 20-ஆண்டுளுக்குத் தள்ளுபடி கிடைக்கும். ஓர் ஆண்டுக்கு வாடகையில் ரூ. 120 தள்ளுபடியாகக் கிடைக்கும்.

குளித்தலையில் காவிரி நகர்

அமைச்சர் மு. கருணாநிதி திறந்துவைப்பார்

குளித்தலை கூட்டுறவு வீடு கட்டும் சங்கக் காலனியின் முகப்பு வாயிலில் அமைக்கப்பட்டுள்ள 'காவிரி நகர்' நுழைவு வளைவை, 24—5—68 மாலை 6-30 மணிக்கு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத் தலைவர் குளித்தலை முத்துக்கிருட்டினன் தலைமையில் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு கருணாநிதி அவர்கள் திறந்துவைத்து சிறப்புரையாற்றுவார்.

அமைச்சர் அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்படும்.

பிளாஸ்டிக்கில் உடலுறுப்பு

தொழிற்சாலைகளிலும், இயந்திரங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்கள் விபத்துக்கு ஆளாகிக் கை, கால் விரல்களை இழந்து விடுவதுண்டு.

இவர்களுக்கு செயற்கை விரல்களைப் பொருத்துவது ஒரு மாற்று ஏற்பாடு.

ஆனால், இதில் உள்ள ஒரு சிக்கல் என்னவென்றால், செயற்கை விரல்கள் கையோடு எளிதில் பொருந்துவதில்லை; இவற்றை இணைப்பது மிகவும் கடினம்; அப்படியே இணைத்தாலும் அதிக நாட்கள் நீடிப்பதில்லை; அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்க வேண்டும்.

இதற்காக இப்போது பிளாஸ்டிக்கினால் ஆன விரல்கள், விரல் இணைப்புகள் ஆகியவற்றை பிரிட்டனில் கண்டுபிடித்துள்ளனர்.

இலண்டன் மருத்துவமனை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இது போன்ற பிளாஸ்டிக் 'உதிரி உறுப்புகள்' ஒருமுறை மாற்றிக்கொண்டால் அது வாழ்நாள் முழுதும் கெடாமல்--தேயாமல் இருக்கும்.

செங்கற்பட்டு மாவட்டத் தலைநகராகக் காஞ்சி

அலுவலகங்கள் மாற்றம் குறித்துக் கலெக்டர் அறிக்கை

சென்னை, மே 16—

செங்கற்பட்டு மாவட்டத் தலைமை அலுவலகம் சைதாப்பேட்டையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு மூன்று கட்டடங்களில் மாற்றப்படும்.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் பகுதியில் பல கட்டிடங்களையும், மனைகளையும் பார்வை யிட்டார்.

"முதல் கட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரின் புதிய அலுவலகம் காஞ்சிபுரம் நகராட்சி எல்லைக்குச் சற்று வெளியே வேதவதி ஆற்றின் கரையில் 16 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் ஏற்படுத்தப்படலாம்" என்று மாவட்ட ஆட்சித் தலைவர் யோசனை கூறியுள்ளார்.

இந்த இடம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்கு மிகவும் பொருத்தமாக இருப்பதாகவும், சுமார் ரூ 12 இலட்சம் செலவில் அந்த இடத்தில் அலுவலகமும், மாவட்டக் கருவூலகக் கட்டிடமும் கட்ட முடியும் என்றும் அவர் யோசனை கூறியுள்ளார்.

"மாவட்டத் தலைமை அலுவலகத்தை மூன்று கட்டங்களில் காஞ்சிபுரத்திற்கு மாற்றலாம்" என்றும் அவர் கூறியுள்ளார்.

உடனடியாகக் கூடுதல் செலவின்றி போலீசு சூப்பிரண்டெண்டு அலுவலகத்தைக் காஞ்சிபுரத்திற்கு மாற்றமுடியும்.

காஞ்சிபுரத்திலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையக் கட்டிடத்தில் போலீசு சூப்பிரண்டெண்டு அலுவலகத்தை வைத்துக்கொள்ளலாம்; இந்த இடம், மாவட்ட அலுவலகத்திற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு எதிரே இருக்கிறது. இந்தக் கட்டிடம் பயன்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறப்பதாகக் கூறப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், போலீசு சூப்பிரண்டெண்டு ஆகியோரின் வீடுகளைக் கட்டுவதற்குக் குருவிமலை கிராமத்தில் 14 ஏக்கர் புறம்போக்கு மேய்ச்சல் நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் தேர்வு செய்துள்ளார்; இந்த இடம், பாலாற்றின் கரையில், காஞ்சிபுரம்—உத்திரன்மேரூர் சாலையையொட்டி இருக்கிறது. இந்த இரு வீடுகளையும் கட்டுவதற்கு ரூ. 1 25 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது பறங்கிமலையில் உள்ள ஆயுத ரிசர்வ் போலீசுப் படையில் 3 பிரிவுகளை உடனடியாகக் காஞ்சிபுரத்திற்குக் கொண்டு போகலாம்; அவர்களுக்கு ரூ. 1.20-இலட்சம் செலவில் வீடுகளைக் கட்டலாம்; எஞ்சியுள்ள ஆயுத ரிசர்வ் போலீசுப் படையை 5 ஆண்டுகளில் படிப்படியாகக் காஞ்சிபுரத்திற்கு மாற்றிக்கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர் வீட்டுக்கு எதிரே 80 ஏக்கர் பரப்புள்ள புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கு ரூ. 40-இலட்சம் செலவில் படிப்படியாக, ஆயுத ரிசர்வ் போலீசாருக்கு வீடு கட்டலாம்.

மாவட்ட மருத்துவ அதிகாரி, மாவட்ட விவசாய அதிகாரி, வர்த்தக வரி அதிகாரி முதலியவர்கள் ஏற்கனவே காஞ்சிபுரத்தில் உள்ளனர்.

நிர்வாகப் பொறியர் (பொதுப் பணித்துறை), வட்டார மோட்டார் போக்குவரத்து அதிகாரி, மாவட்ட சுகாதார அதிகாரிகள் முதலியவர்கள் காஞ்சிபுரத்திற்கு இப்போதே செல்லலாம். அவர்களுடைய அலுவலகங்களுக்கு வாடகைக்குக் கட்டடங்கள் கிடைக்கும்.

மற்ற மாவட்ட அதிகாரிகள் படிப்படியாகக் காஞ்சிபுரம் செல்லலாம். இது, முதல் கட்டத்தில் நடைபெற வேண்டிய வேலை.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக ஊழியர்களுக்கு—அதாவது அதிகாரிகளுக்கும், எழுத்தர்களுக்கும் குடியிருப்புக் கண்டுபிடிப்பதில் முதலில் தொல்லைகள் ஏற்படலாம்; நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் இந்தத் தொல்லைகள் தீர்ந்துவிடக்கூடும்; ஏனெனில், காஞ்சிபுரம் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம், பல குடியிருப்புக்களைக் கட்டித் தருவதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

மூன்றாவது கட்டத்தில், மாவட்ட அதிகாரிகளுக்குக் குடியிருப்பு வசதி செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

"சென்னை — நந்தனத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை காஞ்சிபுரத்திற்கு மாற்றுவதால், சென்னை நகரில் ஆண்டுக்கு ரூ. 1 5 இலட்சம் வாடகை மதிப்புள்ள அரசு ஊழியர்களின் வீடுகள் காலியாகும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவரின் யோசனைகளை அரசு, கீழ்க்கண்ட மாறுதல்களுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறது :—

1. பறங்கிமலையில் உள்ள ஆயுத ரிசர்வ் போலீசுப் படையின் மூன்று பிரிவுகளை இப்போது காஞ்சிபுரத்திற்கு மாற்றி, அவற்றிற்கு வீட்டு வசதி கண்டுபிடித்தால், பொது ரிசர்வ் ஆயுதப் போலீசின் பாக்கிப் பிரிவுகள் பறங்கிமலையில் இருக்கலாம்.

2. ஊழியர்களுக்கான வீடுகளை மாநில வீட்டு வசதிக் கழகம் மூலமாகக் கட்டலாம்; அதாவது, குறைந்த வருமானக்காரர்களுக்கு மதுரை மாவட்டத்தில் என்.ஜி ஓ.-வினருக்கு மாநில வீட்டு வசதிக் கழகம் மாடிக் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்திருப்பதைப்போல் கட்டிக் கொடுக்கலாம். ஆண்டுக்கு ரூ 5 இலட்சம் வீதம் செலவிட்டு ஐந்து ஆண்டுக் காலத்தில் ரூ. 25 இலட்சம் செலவில் என்.ஜி ஓ.-வினருக்கு வீடுகள் கட்டலாம். காஞ்சிபுரம், உத்திரமேரூர் சாலைக்கு மேற்புறமுள்ள புறம்போக்கு மேய்ச்சல் நிலத்தை இந்த வகைக்குப் பயன்படுத்தலாம்.

3. மாவட்ட சுகாதார அதிகாரி, நிர்வாகப் பொறியர் (பொதுப் பணித்துறை), வட்டார மோட்டார் போக்குவரத்து அதிகாரி முதலிய மாவட்ட அதிகாரிகளின் அலுவலகங்களை, சென்னை நகரிலிருந்து காஞ்சிபுரத்திற்கு மாற்ற வேண்டியதில்லை; அவசியமானால் பின்னால் இதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

4. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னைப் போலீசுக் கமிஷனர் ஆகியோரின் அதிகாரங்களை, சென்னை நகரைச் சுற்றியுள்ள தொழில் பகுதிகளுக்கு விரிவுபடுத்துவது பற்றித் தனியாகப் பரிசீலனை செய்து, உத்தரவு பிறப்பிக்கப்படும்.

பஞ்சாலைகளுக்குக் கடன் உதவி அதிகரிப்பு

பாங்கிகளுக்கு ரிசர்வ் பாங்கி அனுமதி

நெருக்கடி நிலையைத் தவிர்க்க டெல்லியில் ஆலோசனை

மாநில முதலமைச்சர்களுடன் மத்திய அமைச்சர் விவாதம்

புதுடில்லி, மே 16—

"பஞ்சாலைத் தொழிலுக்குக் குறுகிய காலக் கடன் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டுக் கடன் வரம்பை 50 சதவிகிதத்திலிருந்து 75 சதவிகிதமாக அதிகரிக்க ஷெட்யூல்ட் பாங்கிகளை அனுமதிப்பதற்கு ரிசர்வ் பாங்கி ஏற்கனவே அனுமதித்துள்ளது" என மாநில முதலமைச்சர்களிடம் வர்த்தக அமைச்சகப் பிரதிநிதிகளும், திட்டக் குழுப் பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

நீண்ட காலக் கடன் தேவைகளைப் பொறுத்தவரையில் ஆதாய விகிதத்தைக் குறைத்துக்கொள்ள முக்கிய நிதி நிறுவனங்கள் சம்மதித்துள்ளன.

நான்காவது திட்டக் காலத்தில் இத்தொழில்களை நவீனப்படுத்தவும் சீரமைக்கவும் ரூ. 150 கோடியிலிருந்து 200 கோடி வரையில் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டது; ஆனால், இத்தொகை முழுதும் ஒரே சமயத்தில் தேவைப்படாது; ஆண்டுக்கு ரூ. 15 கோடியிலிருந்து 20 கோடி வீதம் 15 அல்லது 20 ஆண்டுகளில் செலவிடலாம்.

பஞ்சாலைத் தொழிலை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான பல நீண்டகால—குறுகியகால நடவடிக்கைகள் பற்றி வாத்தகத் துறை அமைச்சர் தினேஷ் சிங்கும், மாநில முதலமைச்சர்களும் விவாதித்தனர்.

"தொழிலை நவீன மயமாக்குவதற்குக் கடன் வசதி அளிப்பதற்கான நிபந்தனைகள் தாராளமாக்கப்படவேண்டும்" என்று ஒப்புக்கொள்ளப்பட்டன; அத்துடன், 'கதிர்களையும், தறிகளையும் அதிகரிப்பது தடை செய்யப்பட வேண்டும்' என்றும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால், ஆலைகளை நவீனமயமாக்குவதற்காக பழைய கதிர்கள்—தறிகளுக்குப் பதில், புதிய கதிர்கள், தறிகளை வைக்கலாம்.

பலவீனமான ஆலைகளை ஏற்று நடத்துவது சம்பந்தமாக ஆலைகளைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளுவது சம்பந்தப்பட்டவரையில் மத்திய அரசோ அல்லது அண்மையில் அமைக்கப்பட்ட பஞ்சாலைக் கார்ப்பொரேஷனோ இதில் பொறுப்பேற்காது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால், நீண்டகாலத்துக்கு ஏற்று நடத்துவது சம்பந்தப்பட்டவரையில், மாநிலங்களின் ஒத்துழைப்புடன் கார்ப்பொரேஷன் மூலமாக மத்திய அரசு இதில் ஈடுபடும்.

இம்மாதிரி சந்தர்ப்பங்களில், இத்தகைய ஆலைகளை நடத்த ஒரு துணைக் கார்ப்பொரேஷன் ஏற்படும்; இதில் மத்திய அரசும், மாநில அரசுகளும் சம அடிப்படையில் பங்குகொள்ளும்.

நூற்பு ஆலைகளின் தனிப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், கைத்தறித் துணி வாங்குவதற்கு சிறப்புத் தள்ளுபடியை 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதத்திற்கு உயர்த்துவதற்கு ஆதரவாகக் கூட்டத்தில் பொதுக் கருத்து காணப்பட்டது இத்திட்டத்தை மாற்றுவதால் ஆண்டுக்கு ரூ. 40 இலட்சம் தான் செலவாகும்.

"நூலை இருப்பில் வைத்துக் கொள்வதற்கும் திட்டம் இருக்க வேண்டும்" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது; இதற்கு ரூ. 5 கோடி தான் தேவைப்படும்.

"இத்தொழிலில் இலாபம் கிடைக்கும் நிலை குறைந்துவிட்டது என்ற கருத்துத் தவறானது" எனக் கூட்டத்தில் விளக்கப்பட்டது.

ஆலைகள் வாங்கிய கடன்கள் மீது வட்டி உயர்வே இலாபக் குறைவுக்குக் காரணம் என்பதைக் காட்டப் புள்ளிவிவரங்களை மத்திய வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங் தெரிவித்தார்.

ஆலைகள் 1965–66-ல் ரூ 24.11 கோடி வட்டியாகச் செலுத்தின. 1960–61-ல் அவை செலுத்திய வட்டி ரூ. 9.60 கோடி.

மேற்சொன்ன காலத்தில் இத்தொழிலில் இலாபம் ரூ. 58 கோடியிலிருந்து ரூ 43 கோடியாகக் குறைந்துள்ளது.

இலாபத்தில் குறைவு வட்டி உயர்வுக்கு இசைவாக உள்ளது" என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

காங்கிரசு ஊர்வலத்தின் கயமைச் செயல்

எம்.ஜி.ஆர். மன்றம் தாக்கப்பட்டது

சி. சுப்பிரமணியம் முன்னிலையிலேயே குண்டர்கள் கைவரிசை

12—5—68 இரவு 8-மணிக்கு திருச்சி நகரில், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்களை ஊர்வலமாக அழைத்து வந்தனர்; ஊர்வலத்தில் சென்ற காங்கிரசுக் குண்டர்கள், வழிநெடுகிலும் கலகம் செய்துகொண்டும் கல்லெறிந்து கொண்டும் வந்தனர்.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தின் முன்பு நின்று கொண்டு கண்டபடி கழகத் தலைவர்களையும், போலீசையும் திட்டிக் [illegible]ச்சினர். அத்துடன் மன்றத்தை நோக்கிக் கற்களையும் எறிந்தனர்.

மன்றத் தலைவர் ஜி. அன்புமணியின் வெற்றிலை பாக்குக் கடையை நோக்கிக் கற்களையும், சோடா புட்டிகளையும் வீசினர். அதனால் அன்புமணியின் நெஞ்சில் கல்லடிபட்டது; மற்றவர்களின் மேலும் கற்கள் விழுந்தன.

கழகக் கொடிக் கம்பத்தை உடைத்தும், கொடியைக் கிழித்தும் தீயிட்டனர்.

உடன் போலீசார் வந்து அமைதி காத்து அவர்களைப் போகச் செய்தனர்.

ஊர்வலம் சென்றதும், தெருவில் உள்ள மக்களும் வயதான காங்கிரசுக்காரர்களும் வந்து வருத்தம் தெரிவித்துச் சென்றனர்.

தோழர்கள் அமைதிகாத்து வருகின்றனர். நகர தி. மு. க. முக்கியத் தோழர்களும் வந்து விசாரித்துச் சென்றனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகத்தேர்தல்கள் ஒத்திவைப்பு

★

நகர -- பெருநகரக் கிளைகள்; சென்னை வட்டக் கிளைகள் தேர்தல் நாள் ஒத்திவைப்பு

மே 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நகர—பெருநகரக் கிளைகளின் தேர்தல்கள்,

ஜூன் 8, 9 (சனி, ஞாயிறு)

ஆகிய நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

அதேபோல்,

மே 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த சென்னை வட்டக் கிளைகளின் (டிவிஷன் கிளைகள்) தேர்தல்கள்

ஜூன் 1, 2 (சனி, ஞாயிறு)

ஆகிய நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

அடுத்து வட்ட—மாவட்ட தலைமைக் கழகத் தேர்தல்களுக்கான நாட்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

அறிவகம்', சென்னை-13
10—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மற்றொரு இரயில் விபத்து

30-பேர் பலி --- 35-பேருக்குக் காயம்

போபால், மே 16—

இங்கிருந்து 123 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ப்ரீச்சா இர[illegible] நிலையத்துக்கருகில் ஏற்பட்ட இரயில் விபத்தில் 30 பேர் கொல்லப்பட்டனர்; 35 பேர் காயமடைந்தனர்.

ஓர் எக்ஸ்பிரஸ் இரயில் வண்டி, பஸ்சுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

மூடித் திறக்கும் ஆள் இல்லாத லெவல் கிராசிங்கில் இந்த விபத்து ஏற்பட்டது.

எழுபதுபேரை ஏற்றிக்கொண்டு அஷ்டா என்னுமிடத்திலிருந்து ஷாஜாபூர் சென்றுகொண்டிருந்த தனியார் துறை பஸ் இந்த விபத்தில் சிக்கியது.

இரயிலும் பஸ்சும் ஒரே நேரத்தில் பாதையைக் கடக்க நேர்ந்து ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டன.

திருச்சியில் 'முக்கனி'

அசோகன் குழுவினர் நடிக்கும் நாடகம்

குளத்தூர் வட்ட தி. மு. க. அவைத் தலைவர் மு. வே. சாமி அவர்களின் உதவி நிதிக்காக, எஸ். ஏ. அசோகன் மற்றும் திரைப்பட நடிகர்கள் பங்கேற்கும் (அமைச்சர் மு. கருணாநிதி எழுதிய) 'முக்கனி' என்னும் நாடகம், 19—5—68 இரவு 10-மணிக்கு திருச்சி தேவர் மன்றத்தில், அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி எம்.எல்.ஏ, [illegible] பர[illegible]ங்குசம் எம்.எல்.சி. ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்; பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி. அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரை வழங்குவார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

19--5--68

சென்னை 11-வது வட்டம்

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு ஏழுகிணறு ஆண்டிக் காரக் கோனான் தெருவில்; தலைவர்: அ. செல்வராசன் எம்.சி.; பேசுவோர்: கி. மனோகரன் எம்.பி., முன்னாள் மேயர்கள் வி. முனுசாமி, மைனர் மோசஸ், ஜி இல[illegible]சுமி[illegible]தி எம்.சி. மற்றும் பலர்.

புதுவை

தி ப தொ.மு. சங்கச் சார்பில் மே விழா; மாலை 6 மணிக்கு முதலியார் பேட்டை இராகவன் வானொலிப் பூங்காவில், தலைவர்: கோ. புகழேந்தி; பேசுவோர்: ஏ. எல். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., இரா. சிவகுமார் எம்.ஏ.பி.எல்., களந்தை ஜின்னா, மற்றும் பலர்.

ஆண்டிப்பாளையம்

கலைஞர் படிப்பக முதலாவது ஆண்டுவிழா; மாலை 6-மணிக்கு; தலைவர்: ஜி டி. காதர் உசேன்; பேசுவோர்: எல். கணேசன் எம்.எல்.ஏ., அ. இராசகோபால், இராசன், இரா. சானகிராமன், மற்றும் பலர். (இரவு 8 மணிக்கு கண்ணம்மா—தங்கராசு குழுவினரின் 'பூத்தது பொற்காலம்' எனும் கலைநிகழ்ச்சி நடைபெறும்)

திண்டுக்கல்

சவுந்திரபாண்டியனார் நினைவு மன்றச் சார்பில் மாலை 7மணிக்கு; பெரிய கடை வீதியில்; பேசுவோர்: துரைமுருகன் எம்.ஏ., கேரளசுந்தரம், மற்றும் பலர்.

சிவகாசி — ரிசர்வ லைன்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: அ. புதுமைப்பிரியன்; பேசுவோர்; பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., எஸ். பி. மணியம், அப்தாலிப், எஸ். ஏ. ரசாக், மற்றும் பலர். (வத்திராயிருப்பு-புதுப்பட்டி எம். ஜி. ஆர். கலைக் குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்).

திருவில்லிபுத்தூர்

9-வது வட்ட மதுரை நெடுஞ்சாலை எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு இராம கிருட்டிணபுரம் தெருவில்; தலைவர்: மா. குருசாமி எம்.சி.; பேசுவோர்: கே. எஸ். சந்தானம், மற்றும் பலர்.

கூத்தாநல்லூர்

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு பெரிய கடைத் தெரு வானொலித் திடல் அருகில்; தலைவர்: இரெ. தங்கராசு; பேசுவோர்: எம். ஆர். ஆர். வாசு, கு. பாலகிருட்டினன் எம்.சி, ஏ. எம். ஏ. ரகீம், மற்றும் பலர். என். எம. ஹாஜா மைதீன் இன்னிசை வழங்குவார்.)

மன்னார்குடி

எம்.ஜி.ஆர் ரசிகர்கள் மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு வெண்ணைத்தாழி மண்டபத்திற்கு அருகில்; தலைவர்: ஆர். எஸ். இராசகோபால்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., ப. நாராயணசாமி, கு. பாலகிருட்டினன், இரெ. கணேசன், வீ. இராமையன், இரா. தென்னவன்.

மந்தொவானி அடிகளார் நினைவு நாள்

ஓ மந்தொவானி அடிகளாரின் முதலாண்டு நினைவு நாளும் படத்திறப்பும்; 19—5—68 மாலை 6-30 மணிக்கு பிரபாத் டாக்கீசுக்கு எதிரிலுள்ள புனித சவேரியார் ஆலயத்தில்; தலைமைவகித்துப் படம் திறந்துவைப்பவர்: கி. மனோகரன் எம்.பி.; பேசுவோர்: வள்ளுவன் கிளானிஸ் மோத்தா, ஆ. ஜே. அடைக்கலம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.